2021-22-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE 21 UTM 203

REG.NO:

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வு**கள் : **ஜீலை** - 2022

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெணகள்** : 70

**இரண்டாம பருவம்** **நேரம்** : 3 **மணி**

**பகுதி** – III

**நன்னூல் எழுத்ததிகாரம்**

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. இருவர் மாறுகொள் ஒருதலை துணிவு____________________

அ) மதம் இ) உத்தி

ஆ) குற்றம் ஈ) படலம்

2. சார்பெழுத்தாவது___________________

அ) இடுகுறி இ) ஆய்தம்

ஆ) மாத்திரை ஈ) ஆகுபெயர்

3. மகர இறுதி னகரமாக ஒத்துவருவது___________________

அ) முதற்போலி இ) இடைப்போலி

ஆ) இறுதிப்போலி ஈ) இடைக்குறை

4. மை விகுதி கெடல்_________________

அ) செம்மீன் இ) மூதூர்

ஆ) பெரியன் ஈ) பசுந்தழை

5. பலர்பால் விகுதி_____________________

அ) அன்,ஆள், அர் இ) அர், ஆர், ப,மார்

ஆ) டு, து, று ஈ) மின், இர்,ஈர்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. வேற்றுமைப் புணர்ச்சி என்பது யாது?

7. செய்யுள் விகாரம் என்பது யாது?

8. ‘தனிக்குறில் ஒற்றுவரின் இரட்டும்’—சான்றுரைக்க.

9. லகரம், ளகரம், ஆய்தம் ஆதற்குச் சான்று தருக.

10. வேற்றுமை உருபுகள் நிற்கும் இடம் யாது?

**(த.பி.பா…2)**

**பகுதி – ஆ** (5 x 4 = 20 **மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** (K3)

11. அ) நூலிற்குரிய அழகுகள் யாவை?

(அல்லது)

ஆ) நூல் பயிலும் முறைகள் யாவை?

12. அ) வினா எழுத்துக்கள் அமையும் முறை யாது?

(அல்லது)

ஆ) எழுத்துக்களுக்குரிய மாத்திரைகள் யாவை?

13. அ) செய்யென் ஏவல் வினைப் பகாப்பதங்கள் யாவை?

(அல்லது)

ஆ) மொழிக்கு முதலாகா வடசொற்கள் தமிழாகும் முறையினைச் சுட்டுக.

14. அ) வேற்றுமைத் தொகை என்பதனை விளக்குக.

(அல்லது)

ஆ) ஊகார ஈற்றுப் புணர்ச்சி விதிகளைக் குறிப்பிடுக.

15. அ) தேன் என்னும் சொல் புணருமாற்றை விவரிக்க.

(அல்லது)

ஆ) எண்ணுப்பெயர்கள் புணருமாற்றை விவரிக்க.

**பகுதி – இ** (4x10=40 **மதிப்பெண்கள்)**

**பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க. வினா எண். 16க்குக் கண்டிப்பாக விடையளிக்கவும்.**

**(FROM Qn. No : 17 to 21)** (K4 & K5)

16. நூலில் அமையும் உத்திகளை விவரிக்க.

17. சார்பெழுத்துக்களின் வகை, தொகை குறித்து விளக்குக.

18. ஓரெழுத்து ஒருமொழி குறித்த நன்னூலார் கருத்துகளை எடுத்துரைக்க.

19. அகர ஈற்றுச் சிறப்பு விதிகளைத் தொகுத்துரைக்க.

20. குற்றியலுகர எண்ணுப் பெயர்களின் புணர்ச்சி விதிகளைப் புலப்படுத்துக.

21. சாரியைகள் குறித்த நன்னூலார் கருத்துகளைத் தெளிவுறுத்துக.

***********************